மேலும், நிலுவையில் உள்ள மீதமுள்ள வேலைகளையும் நிச்சய மாக முடிக்க இந்தத் துறை செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. காளியப்பன் : மலைக்குக் கீழ்ப் பகுதியில் உள்ள ஆக்கிரமிப்புக்காரர்களை இந்து சமய அறநிலையத்துறை அகற்றி துறை சார்பாக கட்டிடங்கள் கட்டி வாடகைக்கு விடப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : ஆக்கிரமிப்புக்காரர்கள் எங்கே இருந்தாலும் அவர்கள் அகற்றப்படுவார்கள்.

பேரையூர்-மேலப்பட்டி நெடுஞ்சாலையைச் செப்பனிடுதல்

*2074 திரு. ஆ. அதியமான் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

மதுரை மாவட்டம், திருமங்கலம் வட்டம், பேரையூரிலிருந்து மேலப்பட்டி கிராமத்திற்குச் செல்லும் நெடுஞ்சாலையை உடனே செப்பனிட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

எதிர்வரும் நிதியாண்டில் பராமரிப்பு நிதி நிலைமைக்கேற்ப இச்சாலையை மேம்பாடு செய்து நல்ல முறையில் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மதுரையை மையமாகக் கொண்டு ஹைவேஸ் சர்க்கிள்

*5928 திரு. எஸ். எஸ். தென்னரசு :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையை மையமாகக் கொண்டு இராமநாதபுரம், பசும்பொன், மதுரை, காயிதேமில்லத் மாவட்டங்களை உள்ள டக்கிய ஒரு ஹைவேஸ் சர்க்கிள் உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.